අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/12/1/2/22 | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date .02.2025

உள்ளக சுற்றறிக்கை இலக்கம் : 37/2024

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் நிறைவேற்று சேவை வகையின் III ஆம் தரத்தின் அனைத்து சட்ட அதிகாரிகளுக்கு

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் நிறைவேற்று சேவை வகையின் III ஆம் தர சட்ட அதிகாரிகளுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை-2024(2025)**

2013.03.05 ஆம் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட கல்வி அமைச்சின் நிர்வாக சேவை வகையின் (SL 01-2016) சட்ட அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அதற்குப் பின் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக கல்வி அமைச்சு நிர்வாக சேவை வகையின் III ஆம் தர சட்ட அதிகாரிகளுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2025 ஜுன் மாதத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படும்.

02. பரீட்சை நடைமுறை: கீழ்க்குறிப்பிடப்படும் பாடங்கள் பரீட்சைக்காக உள்ளடக்கப்படும

1. தாபன விதிக்கோவை
2. நிதி ஒழுங்குவிதிகள்

பரிந்துரை தாள்: பின்வரும் பாட விடயங்கள் தொடர்பாக விண்ணப்பதாரர்களின் அறிவு சோதிக்கப்படும்

1) தாபன விதிக்கோவை (01 மணிநேர கட்டமைக்கப்பட்ட வினாத்தாள்)

| | | | |
|---|---|---|---|
| II | ஆம் அத்தியாயம் | - | சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் நடைமுறைகள் மற்றும் நியமனங்கள் |
| IV | ஆம் அத்தியாயம் | - | மாத சம்பளம், தற்காலிக நிலை மற்றும் ஓய்வூதியம் வழங்குதல் |
| V | ஆம் அத்தியாயம் | - | விடுவித்தல் முன்வதித்த பதவிக்கு மீண்டும் அனுப்புதல் மற்றும் சேவையை முடிவுக்கு கொண்டுவருதல் |
| VII | ஆம் அத்தியாயம் | - | சம்பளம் |
| VIII | ஆம் அத்தியாயம் | - | மேலதிக நேர கொடுப்பனவு, விடுமுறை நாட்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் |
| XII | ஆம் அத்தியாயம் | - | விடுமுறை |
| XIII | ஆம் அத்தியாயம் | - | புகையிரத அனுமதிகள சீட்டு |
| XIV | ஆம் அத்தியாயம் | - | நாட்டிற்குள் கடமைப்பயணங்கள் |
| XVI | ஆம் அத்தியாயம் | - | விடுமுறைப் பயணங்கள் |
| XIX | ஆம் அத்தியாயம் | - | அரச வீடு |
| XXVIII | ஆம் அத்தியாயம் | - | நிர்வாக நடைமுறைகள் மற்றும் விதிமுறைகள் |
| XXX | ஆம் அத்தியாயம் | - | அரச அதிகாரிகள் தொடர்பாக அரசாங்கத்திற்குரிய அதிகாரங்கள் |
| XLVII | ஆம் அத்தியாயம் | - | பொது நடத்தை மற்றும் ஒழுக்கம் |

அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள்

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister — +94112784832, +94112784825, minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary — +94112784811, +94112785162, secretary.education@moe.gov.lk, moesecretaryoffice@gmail.com

CamScanner

2) நிதி ஒழுங்குவிதிகள் (01 மணிநேர கட்டமைக்கப்பட்ட வினாத்தாள்)

| | | |
|---|---|---|
| I | ஆம் அத்தியாயம் | ஒருங்கிணைந்த நிதி வருடாந்த மதிப்பீடு வருடாந்த மதிப்பீட்டை மாற்றுதல் |
| II | ஆம் அத்தியாயம் | நட்டங்கள் மற்றும் கைவிடுதல் |
| III | ஆம் அத்தியாயம் | தலைமை கணக்கியல் அதிகாரிகள் வருவாய் கணக்கு அதிகாரிகள் செலுத்தல்களுக்கு அதிகாரம் வழங்குதல், அனுமதித்தல், உறுதிப்படுத்தல், செலுத்தல் |
| IV | ஆம் அத்தியாயம் | பொது நிதி அறங்காவலர், கொடுப்பனவுகள் மற்றும் ரசீதுகள் தொடர்பான செயற்பாடு, செல்லுபடியற்ற காசோலைகளை செலுத்தும் செயற்பாடுகள். |
| VI | ஆம் அத்தியாயம் | பொது நிதி அறங்காவலர், மதிப்பாய்வு சபை, மிகைப்பற்று, வங்கி கணக்குகள் |
| XIII | ஆம் அத்தியாயம் | வேலை மற்றும் சேவைகள், களஞ்சிய பங்குகளை பொறுப்பேற்றல், பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்குதல் தொடர்பான செயற்பாடுகள் |

அரசாங்கத்தின் பெறுகை நடவடிக்கைகள்

குறிப்பு: ஒவ்வொரு வினாத்தாள்களுக்குரிய மொத்த புள்ளிகள் 100 ஆகும். சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாள் தொடர்பாக குறைந்தபட்சம் 40 % வீதமாவது பெறவேண்டும்

03. இந்த பரீட்சைக்காக சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் தோற்றலாம். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கமாட்டாது.

04.

(1) விண்ணப்பப்படிவங்கள் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக A4 அளவிலான தனித் தாளின் இருபக்கத்தையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு தமது கையெழுத்தில் பூர்த்தி செய்து முன்னிலைப்படுத்த வேண்டியதுடன், விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 முதல் 07 இன் கீழுள்ள தலைப்புகளை முதல் பக்கத்திலும் மற்றவை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்படல் வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள/தமிழ் மொழிகளில் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவங்களில் சிங்கள/ தமிழ் மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியில் பூர்த்தி செய்வது அவசியமாகும். அத்துடன் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு பொருத்தமற்ற மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி ரத்துச் செய்யப்படுவதால் விண்ணப்பப்படிவங்களை முன்னிலைப்படுத்துவதற்கு முன் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு பொருத்தமானதா என்றும் அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டு சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்றும், நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விவரங்களை விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கப்பட்டு ரசீது ஒட்டப்பட்டுள்ளனவா என மீண்டும் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்று மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்குரிய ரசீதின் போட்டோ பிரதியொன்று தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(2) பொய்யான தகவல்கள் தொடர்பான தண்டனை : விண்ணப்பப்படிவங்களை நிரப்பும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்கவேண்டும். இந்த பரீட்சையின் சட்டதிட்டங்களின் படி பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் என தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை இடம்பெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு தருணத்திலும் பரீட்சார்த்த நிலையினை ரத்துச் செய்யலாம்..



CamScanner

05. இந்த பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வகுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அந்த சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வகுக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும். மேலும், பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளினால் பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மண்டப அதிபரிடம் அவர்களுடைய ஒப்பத்தை உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி பத்திரத்தை முன்னிலைப்படுத்த வேண்டியதுடன், அனுமதி பத்திரமின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

06. விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதி நாளான 2025.03.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது பிரிவுத் தலைவரின் ஊடாக இணைந்த சேவைகள் தாபனக் கிளைக்கு அனுப்ப வேண்டும். இத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

07. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணபித்துள்ளார்கள் என்ற அடிப்படையில் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதிநாள் அல்லது அதற்கு முன் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரிய ரசீதுடன் சரியாக முழுமைப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி பத்திரம் வழங்கப்படும். அனுமதி பத்திரம் வழங்கப்பட்டவுடன் அதை அறிவிக்கும் அறிவித்தல் ஒன்று பத்திரிகைகளிலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள வலைத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் தமது அனுமதி பத்திரம் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி ஒருவர் இருப்பாரெனில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தாபன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தம்மால் கோரப்பட்ட பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவரெனில் அந்த விவரங்களுடன் பெக்ஸ் மூலமாக பரீட்சை அனுமதி பத்திரத்தின் பிரதியொன்றை விரைவாக பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பதாரரின் பெக்ஸ் இலக்கம் ஒன்றையும் குறிப்பிட்டு கோரிக்கை கடிதம் ஒன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனும் தகவல் ஒன்றை உறுதிப்படுத்துவதற்கு தம்மிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதற்குரிய ரசீதின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலிடும்போது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் தம் வசம் வைத்திருப்பது பயனள்ளதாக அமையும்.

08. அடையாளப்படுத்தல் : பரீட்சாத்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாக மண்டப அதிகாரி திருப்தியுறும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் எந்தவொரு அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதி பத்திரம்

அத்துடன் பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வசதியாக முகம் மற்றும் காதுகளை மூடாமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கும் விண்ணப்பதாரர்கள் மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழையும் தருவாயிலிருந்து பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரரை அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் காதுகள் மூடப்படாமல் இருத்தல் வேண்டும்.



CamScanner

09. பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி பத்திரம் வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்கு தகுதி பெற்றதற்கான அங்கீகாரமாக கருதப்படக்கூடாது.

10. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை தாபனத் தலைவர் அல்லது அவரால் பணிக்கப்பட்ட அதிகாரி மூலமாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்

11. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படும்.

- (அ) முதல்முறையாக பரீட்சைக்குத் தேற்றும் போது (முழுமையான பரீட்சை அல்லது பகுதிகளுக்காக) கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.
- (ஆ) பின்னர் ஒவ்வொரு முறையும் முழுமையான பரீட்சைக்கு ரூ.500.00
- (இ) ஒரு பாடத்திற்கு ரூ. 250.00
- (ஈ) இரண்டு பாடங்களுக்கு அல்லது அதற்கு மேலான ரூ.500.00

இந்த பரீட்சைக் கட்டணங்கள் பரீட்சை ஆணையாளரின் 20-03-02-13 ஆம் இலக்கத்தைக் கொண்ட வருவாய் தலைப்பில் பற்றிலிடக்கூடியதாக நாட்டில் எந்தவொரு தபால் /உபதபால் நிலையத்தில் செலுத்தப்பட்டு விண்ணப்பதாரரின் பெயரால் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட இடத்தில் கழறாத வண்ணம் ஒட்டப்படல் வேண்டும் பரீட்சைக் கடடணங்கள் தொடர்பாக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளச்செலுத்துவதற்கோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. அத்துடன் பற்றுச்சீட்டின் நகல் ஒன்றை தம்மிடம் வைத்திருப்பது பயனள்ளதாக அமையும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி வாசகங்களுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக்க களுவெல
செயலாளர்
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு



CamScanner

மாதிரி விண்ணப்பப்படிவம்

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் நிர்வாக சேவை வகையில் II ஆம் தர சட்ட அதிகாரிகளுக்கான இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை – 2024(2025)

**Executive Service Category of the Ministry of Education, Higher Education and Vocational Education – Second Efficiency Bar Examination for Grade II Legal Officers – 2024(2025)**

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐ ☐
சிங்களம் - 2
தமிழ் - 3 (அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம் )
ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கட்டத்தில் எழுதவும்)

02. (i) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):

.............................................................................................

(உ.ம்.: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):

.............................................................................................

(உ.ம்.: GUNAWARDHANA, H.M.S.K.)

(iii) முழுப்பெயர்(சிங்களத்தில்/தமிழில்):

.............................................................................................

03. அலுவலக முகவரி(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):

.............................................................................................
.............................................................................................

(அனுமதி பத்திரம் இந்த முகவரிக்கு தபாலிடப்படும் )

04. ஆண்/பெண் : ☐ ஆண் - 0
பெண் - 1

05. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. தொலைபேசி இலக்கம்: அலுவலக: ☐☐☐☐☐☐☐☐☐☐

கையடக்க: ☐☐☐☐☐☐☐☐☐☐

07. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கோரப்படும் பாடங்கள்:

| பாட இலக்கம் | பாடம் |
|---|---|
| .................... | ............................ |
| .................... | ............................ |



CamScanner

08. இதற்கு முன் இந்த பரீட்சைக்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கலந்து கொண்டீர்களா? கலந்துகொண்டிருப்பின் பாடங்கள், வருடம் மற்றும் மாதத்தைக் குறிப்பிடவும்

| பரீட்சை | பாடம் | வருடம் மற்றும் மாதம் |
|---|---|---|
| | | |
| | | |

09. கல்வி அமைச்சில் சட்ட அதிகாரி பதவிக்கு உள்வாங்கப்பட்ட திகதி :

வருடம் [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

10. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் : ரு.............................

செலுத்தப்பட்ட திகதி:...............................

ரசீது இலக்கம்:.....................................

செலுத்தப்பட்ட தபால்/ உப தபால்அலுவலகம்:...........................................

(ரசீது கழறாதவண்ணம் அதன் ஓரங்களில் ஒன்றை இங்கு ஒட்டவும்.)

11. மேல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் உண்மை என்றும், கோரப்பட்ட மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமை உண்டு என்றும் தெரிவிக்கின்றேன். முதல் தடவையாக இந்த பரீட்சைக்குத் தோற்றுவதாகவும் */ பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவை அல்ல என்பதால், உரிய பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், அதற்குரிய ரசீது இணைக்கப்பட்டுள்ளது என்றும், * தெரிவிக்கின்றேன். (* பொருத்தமற்ற வார்த்தைகளை வெட்டிவிடவும்.) மேலும் பரீட்சை நடாத்துவது மற்றும் அதன் முடிவுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

.................................
திகதி

.................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

12. கல்விச் செயலாளர் / பரீட்சை ஆணையாளர் நாயகம்

இங்கு குறிப்பிடப்படும் விண்ணப்பதாரர் ..............................ஆம் திகதி எனது முன்னிலையில் ஒப்பமிட்டதை உறுதிப்படுத்துகிறேன்..

.................................
திகதி:

.................................................
உறுதிப்படுத்தும் அலுவலரின் ஒப்பம்
(பதவி முத்திரையை இடவும்)

13. பரீட்சை ஆணையாளர் நாயகம்

இங்கு குறிப்பிடப்படும் விண்ணப்பதாரி அவரால் இங்கு காட்டப்பட்டுள்ள மொழி மூலத்தில் இந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்றும், முதல் முறையாக இந்த பரீட்சைக்கு விண்ணப்பிப்பதால் பரீட்சைக் கட்டணத்தில இருந்து விலக்கு அளிக்கப்படுவார் என்றும் / நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி அந்த ரசீது இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும், உறுதிப்படுத்துவதுடன், விண்ணப்பத்தை பரிந்துரை செய்து சமர்ப்பிக்கின்றேன்.

.................................
திகதி:

.................................................
நிறுவனத்தலைவரின் ஒப்பம் மற்றும் பதவிப்பெயர்
(பதவிமுத்திரையை இடவும்.)



CamScanner